NSW GOVERNMENT | Education
Public Schools

# *‘Nitbusters: பாடசாலை பேன், ஈர் ஒழிப்புத் திட்டம்’* குறித்து பெற்றோர்கள்/ கவனிப்பாளர்களுக்கான கடிதம்
# Letter to parents/carers concerning *Nitbusters: Head lice in schools program*

பிள்ளையின் பெயர் ________________________ Child’s name    வகுப்பு ____________ Class

‘Nitbusters தினம்’ நடத்தப்படும் திகதி ________________________ Date of Nitbusters Day

சம்மதப் படிவத்தினைத் திருப்பி அனுப்புவதற்கான திகதி ________________________ Date for return of consent form

அன்புடைய பெற்றோர்/கவனிப்பாளருக்கு:

தலைப் பேன்களைப் பற்றியும், அவற்றை எப்படி ஒழிப்பது என்பதைப் பற்றியும் பாடசாலைகள், பிள்ளைகள் மற்றும் பெற்றோருக்குக் கற்பிப்பதை ‘Nitbusters’ நோக்கமாய்க் கொண்டுள்ளது.

மேலே சொல்லப்பட்டுள்ள திகதியில் பாடசாலயில் நடத்தப்படவிருக்கும் ‘Nitbusters தின’த்தில் பங்குபற்ற உங்களது பிள்ளைக்கு அனுமதி வழங்குமாறு உங்களை வேண்டி இதை எழுதுகிறேன். தலைப்பேன் இருக்கிறதா என்று எல்லா பிள்ளைகளையும் சோதித்து, அவர்களுக்கு சிகிச்சையளிக்க அனைத்து பெற்றோர்களுக்கும் ‘Nitbusters தினம்’ வாய்ப்பளிக்கிறது.

இதில் பங்குபெற வேண்டுமென ஒவ்வொரு பிள்ளையும் ஊக்குவிக்கப்படுகிறது. கையொப்பமிடப்பட்ட சம்மதப்படிவம் இல்லாமல் எந்தவொரு பிள்ளையாலும் திட்டத்தில் பங்குபெற இயலாது, மற்றும் பங்கு பெறாமல் இருந்தால் அதற்காக எந்தவொரு பிள்ளையும் எவ்விதத்திலும் தண்டிக்கப்பட மாட்டாது. பெற்றோர்கள்/கவனிப்பாளர்கள் மற்றும்/ அல்லது பிள்ளைகள் ஆகியோர் எந்த நேரத்திலும் இச் சோதனையில் இருந்து விலகலாம். பங்கு பெறாத பிள்ளைகள் பேன்களையும், ஈர்க்களையும் எப்படி அடையாளம் கண்டு ஒழிப்பது என்பதைக் கற்றுக்கொள்ளலாம்.

‘Nitbusters தின’த்தன்று ஒவ்வொரு பிள்ளையின் தலையிலும் தீவிர பேன் மொய்ப்பு இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்த அவர்களது கேசம் சோதித்துப் பார்க்கப்படும். சோதனை மற்றும் சிகிச்சையின் போது உதவியாக இருக்கும் பெற்றோர்கள் ஒருமுறை பாவிப்பு இரப்பர் கையுறைகளை அணிய வேண்டும். ஈர்கள் அல்லது பேன்கள் காணப்பட்டால் பொதுவான கண்டிஷனர் (கேசவர்த்தினி) ஒன்று கேசத்தில் பூசப்பட்டு, சீப்பு ஒன்றினால் கேசம் வாரப்படும். பெரிய சீப்பு ஒன்றைக் கொண்டு கேசத்தில் உள்ள சிக்கல்கள் நீக்கப்பட்ட பிறகு, சிறிய பற்களைக் கொண்ட சீப்பு ஒன்று ஈர்கள் அல்லது பேன்களை நீக்கப் பாவிக்கப்படும். வெவ்வேறு பிள்ளையை சோதிக்கும்போது வெவ்வேறு கையுறைகள் பாவிக்கப்படும். பிள்ளையின் தலையில் நோய்த்தாக்கு, புண் அல்லது சொரியாசிஸ் எனப்படும் தோல் நோய்க்கான அறிகுறிகள் காணப்பட்டால் அப்பிள்ளைக்கு சோதனை மற்றும் சிகிச்சை அளிக்கப்படமாட்டாது.

எல்லாம் முடிந்த பிறகு பிள்ளயின் கேசம் வாரப்பட்டு சீர் செய்யப்படும். பாடசாலையில் இயலாது என்பதால், கேசத்தில் பூசப்பட்ட கண்டிஷனரை நீக்குவதற்காக கேசத்தை இங்கு கழுவ மாட்டார்கள். இந்த கண்டிஷனர் கேசத்தைப் பாதிக்கது என்பதால், பிள்ளை வீட்டிற்குத் திரும்பிய பிறகு இதைக் கழுவிக் கொள்ளலாம்.

60 டிகிரி செண்ட்டிகிரேடு வெப்பத்தில் தலைப் பேன் சாகும் என்பதால், ஒவ்வொரு குழந்தைக்கும் சிகிச்சை முடிந்த பிறகு எல்லா சீப்புகளும் சோப்பு கலந்த வென்னீரில் சுத்தம் செய்யப்பட்டு ஓடும் வென்னீரில் மீண்டும் கழுவப்படும்.

உங்கள் பிள்ளையின் தலையில் ஈர்கள், பேன்கள் அல்லது பேன் மற்றும் ஈர் இரண்டுமே காணப்படால், உங்களுக்கு இதைத் தெரியப்படுத்த உங்கள் வீட்டிற்குக் குறிப்பு ஒன்று அனுப்பப்படும். இத்திட்டத்தில் பங்கு பெறாத பிள்ளைகளின் பெற்றோர்கள் உட்பட, சகல பெற்றோர்களுக்கும் தலைப் பேனுக்கு எப்படி சிகிச்சையளிப்பது என்பதைப் பற்றிய தகவலேடு ஒன்று தரப்படும்.

‘Nitbusters’ திட்டம் உங்கள் பாடசாலையில் வெற்றியடைய ஒவ்வொரு பிள்ளையும் இதில் ஈடுபாடு கொள்ள வேண்டும். ஒரு பிள்ளையின் தலையில் பேன் மொய்ப்பு இருந்தாலே போதும், வகுப்பிலுள்ள எல்லா பிள்ளைகளுக்கும் இது பரவிவிடும். ஒருவரது வயது, பாலினம் அல்லது பின்புலம் எதுவாயிருந்தாலும் அவர் தலையில் பேன் மொய்ப்பு ஏற்படலாம் என்பதே முக்கியமான செய்தியாகும். இதற்கான சிகிச்சை சமுதாய அடிப்படையில் அமைந்ததாகவும், தொடர்ந்து தரப்படுவதாகவும் இருக்கவேண்டும்.

பாடசாலையில் உள்ள அனைத்துப் பிள்ளைகளுக்கும் பாடசாலை வளாகத்தில் வைத்து ஒரே நேரத்தில் சிகிச்சையளிக்க முயலும் விதத்தில் ‘Nitbusters தின’த்தை பாடசாலையில் நடத்த பாடசாலையோடு சம்பந்தப்பட்ட அனைவரும் ஒருங்கிணைப்பாய் இதில் ஈடுபட வேண்டும். எல்லா பிள்ளைகளையும் சோதித்து அவர்களுக்கு தலைப் பேன் சிகிச்சையளிப்பதற்காக, பாடசாலையின் பெற்றோர் குழுவினர் இந்த நிகழ்வுக்கான திகதியையும், உதவியாளர்களையும் ஏற்பாடு செய்து தரவேண்டும். சுயவிருப்புத் தொண்டராகச் செயல்படும் பெற்றோர்/கவனிப்பாளர்கள் வகுப்புவாரியாக பிள்ளைகளை சோதிப்பார்கள். வயதில் குறைந்த சிறு பிள்ளைகள் பாடசாலை நாளின் துவக்கத்திலேயே சோதிக்கப்படுவர். தலைப் பேன் சிகிச்சைக்காக கண்டிஷனர் மற்றும் சீப்புகளைப் பாவித்து, தலையை சீப்பினால் வாரி பேன்களை அகற்றும் பாதுகாப்பான இரசாயனப் பொருட்கள் அற்ற முறை இத்திட்டத்தில் பின்பற்றப்படும்.

‘Nitbusters’ தினத்தில் உங்கள் பிள்ளை பங்குபெற நீங்கள் சம்மதித்தால், தயவு செய்து இப்படிவத்தினை ஆங்கிலத்தில் நிரப்பி, மேலே குறிப்பிட்டுள்ள திகதிக்குள்ளாக அதைப் பாடசாலைக்குத் திருப்பியனுப்புங்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் தனித் தனி சம்மதப் படிவத்தில் கையொப்பம் இட வேண்டும்.

‘NSW சுகாதார சேவை’யின் ‘Nitbusters’ வலைத்தளத்தில் உள்ள தகவல்களின் அடிப்படையில் இத்தகவகல்கள் அமைந்துள்ளன.